# ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தல்

## இலங்கையின் பொருளாதாரம் 2016 இல் 4.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது

# இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்
# 2016 நான்காம் காலாண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டு

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

.......................................................................................................

2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டுக்குமான மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டுக் காலப் பகுசியில் இலங்கை சாதகமற்ற காலநிலை நிலைமையை எதிர்கொண்டது. இக் காலப்பகுதியில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி நிலைமை காரணமாக விவசாயத் துறை கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளது. விசேடமாக 2016 இரண்டாம் காலாண்டுப் பகுதியில் கடும் வெள்ளப்பெருக்கும், முழு வருடமும் வரட்சியும் காணப்பட்டதால் விவசாய நடவடிக்கைகளைப் பெரிய அளவில் பாதித்துள்ளது. இதன் காரணமாக விவசாய துறையின் 2016 ஆம் ஆண்டுக்கான மொத்த வளர்ச்சி வீதம் வீழ்ச்சியுற்றும், மறை வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்கிறது.

2016 ஆம் ஆண்டிற்கான பொருளாதார மதிப்பிடப்பட்ட வளர்ச்சி வீதம் 4.4 சதவீதமெனவும் அதே ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான பொருளாதார மதிப்பிடப்பட்ட வளர்ச்சி வீதம் 5.3 சதவீதமெனவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடுகிறது.

இலங்கையின் 2016 ஆம் ஆண்டிற்கான (தை தொடக்கம் மார்கழி) மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் (2010) ரூபா 9,012,026 மில்லியனை அடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி ரூபா 8,633,890 மில்லியனாகும்.

2016 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான:விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்களிப்பினை முறையே 7.5 சதவீதம், 27.1 சதவீதம், 57.0 சதவீதம் மற்றும் 8.4 சதவீதமாக பதிவு செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் முழுக் காலப் பகுதியில், விசேடமாக கைத்தொழில் நடவடிக்கைகள் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதமாக 6.7 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுவதுடன், அதேவேளை சேவைகள் நடவடிக்கைகள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 4.2 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கின்றது. ஆனால் விவசாய நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதம் 4.2 சதவீத மறை வளர்ச்சியையே காட்டியிருக்கின்றது.

### விவசாய துறையின் செயற்பாடு

2016 ஆம் ஆண்டில் மொத்த விவசாய துறையின் வளர்ச்சியானது 4.2 சதவீத மறைப் பெறுமானத்தையே பதிவு செய்தது. விவசாய துறையின் உப நடவடிக்கைகளுக்கிடையில், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமான பிரதான விவசாய நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் மறை வளர்ச்சி வீதத்தையே பதிவு செய்துள்ளது. அவற்றுள் உப பிரிவான 'நெல் வளர்ச்சி', முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 31.0 சதவீதத்தால் பெரியளவில் குறைந்துள்ளது. அத்துடன் 'தேயிலை வளர்ச்சி ' , 'இறப்பர் வளர்ச்சி', மற்றும் 'தானியங்களின் வளர்ச்சி', என்பன 11.2 சதவீத, 10.7 சதவீத, 10.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.. மேலும் 'பழவகைகளின் வளர்ச்சி', 'காய்கறிகளின் வளர்ச்சி', மற்றும் 'எண்ணைய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக ' என்பன முறையே 3.7 சதவீத, 2.1 சதவீத மற்றும் 0.6 சதவீத சிறிய வீழ்ச்சி வீதங்களை காட்டுகிறது. இவ்வேளையில் 'நன்னீர் மீன்பிடி', 'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி', 'விலங்கு உற்பத்தி' என்பன முறையே 9.9 சதவீத 6.4 சதவீத, 6.3 சதவீத வளர்ச்சி வீதங்களை 2016 ஆம் காலப் பகுதியில் பதிவு செய்தது.

## கைத்தொழில் துறையின் செயற்பாடு

இந்த வருடத்தில் கைத்தொழில் நடவடிக்கைகள் 6.7 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தை பதிவு செய்ததுடன், கைத்தொழில் நடவடிக்கைகளின் பிரிவுகளுக்கிடையில் 'கட்டடவாக்கம்' நடவடிக்கை கைத்தொழில் நடவடிக்கைகளில் உயர் பங்களிப்பை அளிப்பதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 14.9 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. இத்துடன் உப நடவடிக்கையான 'சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்' 14.4 சதவீத மிக உயர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது.

2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கைத்தொழில் துறை நடவடிக்கைகளின் கீழுள்ள தயாரிப்பு நடவடிக்கைகள் 1.7 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது. தயாரிப்பு நடவடிக்கைகளுக்கிடையில், முக்கியமாக 'அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்தி'கள்', 'இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் உற்பத்தி', 'பொறி மற்றும் இயந்திர உற்பத்திகள்'' 28.7 சதவீதத்தாலும் 17.9 சதவீதத்தாலும் 14.1 சதவீதத்தாலும் 2015 கடைசி வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. அதேவேளை 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி ' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி' முறையே 2.5 சதவீதத்தாலும் 0.2 சதவீதத்தாலும் குறைந்துள்ளது. 'மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல்', இன் சேர்க்கப்பட்ட பெறுமதி இக் காலப் பகுதியை கருதும்போது 8.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

## சேவைத் துறையின் செயற்பாடு

முன்னைய வருடம் 2015 உடன் ஒப்பிடும் போது, 2016 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் மூன்று பிரதான நடவடிக்கைகளில், சேவைத் துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை (57.0 சதவீத) இது வழங்குவதுடன் 4.2 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளான 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', 'காப்புறுதி நடவடிக்கைகள்', 'தொலைத்தொடர்பு', 'நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் ஒலிபரப்பு', 'கல்விச் சேவைகள்', மற்றும் 'தகவல் தொழில்நுட்ப ஆலோசனைகள்', என்பன குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 12.4 சதவீத, 8.5 சதவீத, 8.3 சதவீத, 7.7 சதவீத, 7.5 சதவீத மற்றும் 7.1 சதவீதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தாங்கி நிற்கிறது.




### 2016 நான்காம் காலாண்டுக்கான செயற்பாடு

2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் ரூபா 2,526,738 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடும் போது 5.3 சதவீத வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்ததென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடுகிறது. 2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில், விவசாய நடவடிக்கைகள் 8.4 சதவீதத்தால் மறை வளர்ச்சியை பதிவு செய்கிறது. இவ்வேளையில் கைத்தொழில் துறையின் மொத்தச் செயற்பாடு 9.2 சதவீதத்தால் 2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் பெரியளவில் அதிகரித்ததுடன், சேவைத் துறை 4.6 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கின்றது.

2016 ஆம் ஆண்டுக்கான மற்றும் நான்காம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் அரச அறிவித்தலின் வெளியீட்டின்படி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.statistics.gov.lk

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
**பணிப்பாளர் நாயகம்**
**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

---

***இந்த ஊடக அறிக்கையை 2017 மார்ச் 15 ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் பிரசுரிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்க.***